1994 ஏப்ரல் 8]

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில நிபந்தனைகளை இங்கே சொன்னார்கள். அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அங்கே உள்ள பள்ளிகள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் ஒரு இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது 2 இலட்சம் ரூபாய் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்ட வேண்டுமென்று சொல்லப்படுகிறதே, அதைச் சற்றுக் குறைத்து, அதாவது கிராமத்து பிள்ளைகளுக்காவது, ஒரு 50 ஆயிரம் ரூபாயாக இந்தக் கட்டணத்தைக் குறைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு இலட்சம் கட்ட வேண்டுமென்று எந்தப் பள்ளியிலும் நிபந்தனை விதிக்கப்படுவதில்லை. ஒரு மேல்நிலைப் பள்ளி தொடங்குவதற்கு, மேம்படுத்தப்படுவதற்கு ஒரு இலட்சம் ரூபாய்தான் கட்ட வேண்டுமென்று நீண்ட நாட்களாக அரசு ஆணை இருக்கிறது. அதைக் குறைக்கின்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 238, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

238--

போளூர் வட்டம், மாம்பட்டு நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்

***21937–திரு. தா. வேடியப்பன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) போளூர் வட்டம், மாம்பட்டு கிராம நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு சார்பில் கடந்த ஆண்டு என்னுடைய போளூர் தொகுதியில்

அத்திமூர், கொல்லைமேடு என்ற ஓர் இடத்திற்கும், குப்பம் ஊராட்சியில் கும்பல்கோட்டா என்ற இடத்திற்கும், இரண்டு ஓர் ஆசிரியர் பள்ளிகளை வழங்கினார்கள்.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்--விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியினுடைய அடித்தளத்தில் வாழக்கூடிய, குறிப்பாக கிராமப்பகுதிகளில் வாழக்கூடிய ஏழை எளிய மக்களுக்காக இரண்டு பள்ளிகளை வழங்கினார்கள் புரட்சித் தலைவி அவர்கள். அதற்காக என் இதயத் தாய் அவர்கட்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேட்கவேண்டும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பட்டு கிராமத்தைப் பொறுத்தவரையில் நடுநிலைப்பள்ளியாக இருக்கிறது. அங்கே 350 பிள்ளைகள் படிக்கிறார்கள். அதைச் சுற்றியுள்ள குள்ளமேடு பள்ளியில் 120 பிள்ளைகள் படிக்கிறார்கள். ராமாவரம் பள்ளியில் 160 பிள்ளைகள் படிக்கிறார்கள். எழுவாம்பாடி என்ற கிராமத்தில் 150 பிள்ளைகள் படிக்கிறார்கள். எடப்பாரை என்ற கிராமத்தில் 190 பிள்ளைகள் படிக்கிறார்கள். சோமத்தபுத்தூர் பள்ளியில் 145 பிள்ளைகள் படிக்கிறார்கள். திருசூரில் 160 பிள்ளைகள் படிக்கிறார்கள். இப்படியாக அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள 7,8 பள்ளிகளிலிருந்து சுமார் ஆயிரம் பிள்ளைகள் படிக்கக்கூடிய ஒரு முக்கியமான இடமாகும் அது. அதேபோல் மாம்பட்டைப் பொறுத்தவரையில் அது நெசவாளர்கள் நிறைந்த பகுதியாகும். ஏழை எளிய மக்களுடைய இன்னலை நீக்கும் வகையில் ஆவன செய்யவேண்டும். குழந்தைகள் எல்லாம் போளூர் சென்று படிக்க வேண்டுமென்றால் ஏறத்தாழ 6 கிலோமீட்டர் தூரம் செல்லவேண்டும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி 2 திட்டத்தின் நிதியாதாரத்தின் அடிப்படையில் உயர்மட்டக் குழு இந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில் 1990-91-ஆம் ஆண்டிலே 25,000 ரூபாய் கட்டினால் உயர்நிலைப்பள்ளியாக அந்தப் பள்ளி மாற்றப்படும்

என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதன்பிறகு 60,000 ரூபாய் கட்டவேண்டும் என்று கூறியவுடன் 25,000, 10,000, 12,000, 13,000 என்று அந்த கிராம மக்களிடையே நன்கொடை வசூல் செய்து 60,000 ரூபாயையும் கட்டி இருக்கிறோம். அதேபோல இடத்தைப் பொறுத்தவரையில் 5 ஏக்கர் நிலமும் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறோம். அரசுக்குப் பரிந்துரை செய்யும் வகையில் அதனுடைய உண்மை நகலை நம்முடைய இதயத்தாய் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் கொடுத்திருக்கிறேன். தயவுகூர்ந்து இந்த நிதியாண்டிலேயே அதைச் சேர்த்து அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக வழங்குவார்களா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய முதல் கேள்விக்கு அளித்த பதிலையே உறுதி செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 239, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

239--

திருப்பத்தூர் தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு தனி மருத்துவமனை கட்டுதல்.

***23103–திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூர் தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு தனி மருத்துவமனை கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பீடித் தொழிலாளர் நல நிதிச் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள மத்திய மற்றும் மாநில ஆலோசனைக் குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில்தான் பீடித் தொழிலாளர் நலன் குறித்த திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடிவு செய்யப்படுகிறது. திருப்பத்தூர் தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு தனி மருத்துவமனை கட்டிக் கொடுக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதியில் அதிகமான பீடித் தொழிலாளர்கள்